**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்.**

முன்னிலை: **கா. நிலவரசன்,** B.A.,B.L,

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர், திருப்போரூர்.

2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 08 ஆம் நாள் திங்கட்கிழமை

**பட்டியல் வழக்கு எண்.92/2024**

**வழக்கின் சுருக்கம்**

(விதி 106 குற்றவியல் நடைமுறை விதிகள் மற்றும் நீதிமுறை படிவம் 61)

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | தமிழ்நாடு அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர், காயார் காவல் நிலையம், குற்ற எண்.49/2024 |
| 2. | எதிரியின் பெயர் | ரமேஷ் குமார் |
| 3. | எதிரியின் தந்தை / கணவர் பெயர் | சீனிவாசன் |
| 4. | எதிரியின் தொழில் | கூலி |
| 5. | எதிரியின் முகவரி | எண்.4/55, செல்லியம்மன் கோவில் தெரு, பனங்காட்டுபாக்கம் கிராமம், வண்டலூர் தாலுக்கா, செங்கல்பட்டு |
| 6. | எதிரியின் வயது | 54/2024 |
| 7. | எதிரியின் இனம்/சமுதாயம் (காண்க நீதிமுறை படிவம் 61) | – |
| 8. | குற்ற நிகழ்வு நாள் | 15.03.2024 |
| 9. | இறுதி அறிக்கை/தனி நபர் புகார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 12.07.2024 |
| 10. | எதிரி நீதிமன்றத்தில் ஆஜரான நாள் | 13.08.2024 |

| | | |
|---|---|---|
| 11. | எதிரி பிணையில் சென்ற நாள் | 20.03.2024 |
| 12. | வழக்கு அமர்வு நீதிமன்ற விசாரணைக்கு மாற்றப்பட்ட நாள் | எழவில்லை |
| 13. | விசாரணை தொடங்கப்பட்ட நாள் (பிரிவுகள் 207 மற்றும் 238 குவிமுச) | 13.08.2024 |
| 14. | விசாரணை முடிவுற்ற நாள் | 05.06.2026 |
| 15. | தீர்ப்பு/உத்தரவு நாள் | 06.06.2026 |
| 16 | எதிரிக்கு தீர்ப்பு நகல் வழங்கப்பட்ட நாள் | எழவில்லை |
| 17. | காலதாமத்திற்க்கான காரணம் | எழவில்லை |

இவ்வழக்கு 12.07.2024 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 05.06.2026 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் **கற்றறிந்த குற்ற உதவி வழக்கறிஞர் நிலை– i** அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.V.ராஜேஷ்குமார்** அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதமும், வழக்காவணங்கள் பரிசீலித்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

வண்டலூர், பனங்காட்டுபாக்கம் கிராமத்தை சேர்ந்த அ.சா.1 கடந்த 15.03.2024 அன்று இரவு 08.30 மணியளவில் அவரது கோழியை தேடி அவரது தம்பியான எதிரியின் வீட்டின் வழியே சென்றபோது, எதிரி குடிபோதையில்

ஆபாசமாக திட்டிக்கொண்டே, வண்டியின் சாவி கூர்கொண்டு தாக்கியும், வாயால் கடித்தாகவும், அ.சா.1 வலி தாங்காமல் அளரியதால் அவரது மருமகன் அ.சா.2 மற்றும் பக்கத்தில் வீட்டில் உள்ளவர்கள் வந்து அ.சா.1 ஐ காப்பாற்றியதாகவும், எதிரியின் மீது காயார் காவல் நிலைய உதவி ஆய்வாளர் பிரிவுகள் 294(b), 323 மற்றும் 324 இ.த.ச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கின் எதிரி அழைப்பாணையின் பேரில் இந்நீதிமன்றத்தில் ஆஜராகிய பிறகு பிரிவு 230 பா.நா.சு.ச–வின் கீழ் வழக்கின் ஆவணங்கள் இலவசமாக வழங்கப்பட்டு, எதிரிஅதனை மறுத்ததால் வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டத்தில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றங்களுக்கு முதல் தோற்ற வழக்கு காணப்பட்டதால், எதிரிக்கு எதிராக பிரிவுகள் 294(b), 323 மற்றும் 324 இ.த.ச. மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு, எதிரிக்கு தமிழில் படித்து காட்டி வினவியபோது எதிரி அதனை மறுத்ததால், அவருக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றசாட்டுக்கள் குறித்து விசாரணை செய்ய அரசு தரப்பிற்கு இந்நீதிமன்றம் உத்தரவிட்டது.

3. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 ஆகிய சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 ஆகிய சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுபொருள் குறியீடு செய்யவில்லை.

**4. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்;**

i. மேற்கண்ட சம்பவத்தை தொடர்ந்து காயமுற்ற அ.சா.1 நெல்லிக்குப்பம், சத்யசாய் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளார். அங்கு பணியில் இருந்த மருத்துவர் இந்துமதி என்பவர் அவருக்கு சிகிச்சை அளித்துள்ளார். பின்பு மறுநாள் காலை 10.00 மணிக்கு காயார் காவல் நிலையம் சென்று சம்பவம் சம்பந்தமாக அ.சா.ஆ.1/புகார் கொடுத்துள்ளார்.அந்த புகாரை பெற்ற இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி காவல் உதவி ஆய்வளர் திரு.விஜயகுமார் என்பவர் 19/03/2024 அன்று காலை 11.00 மணியளவில் குற்ற எண்.49/2024, ச/பி.294(பி), 323, 324 இ.த.ச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் அ.சா.ஆ.2/முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

ii. பின்பு அன்று மதியம் 12.15 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் மகாதேவன் மற்றும் பார்த்திபன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை

பார்வையிட்டு அ.சா.ஆ 3/பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.4/மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்பு சாட்சிகள் அ.சா.1 முதல் அ.சா.ஆ.3, மகாதேவன் மற்றும் பார்த்திபன் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

iii. இவ்வழக்கின் எதிரியை அன்றைய தினமே கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். மேலும் காயமுற்ற அ.சா.1 ற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் இந்துமதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.1 ற்கு வழங்கப்பட்ட அ.சா.ஆ.5/கருத்துரையுடன் கூடிய விபத்து பதிவேடு பெற்று, இவ்வழக்கின் புலன் விசாரணை நிறைவு செய்து எதிரியின் மீது பிரிவுகள் 294(பி), 323, 324 இ.த.ச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

5. எதிரிக்கு எதிராக சொல்லப்பட்டுள்ள சாட்சியங்கள் குறித்து பிரிவு 351(1)ஆ பா.நா.சு.ச–வின் கீழ் வினவியபோது எதிரி தனக்கு எதிரான சாட்சியங்களை மறுத்துள்ளார். மேலும் தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் யாரும் இல்லை என்று தெரிவித்தார்.

6. அரசு தரப்பில் தோன்றிய கற்றறிந்த குற்றவியல் உதவி வழக்கறிஞர் நிலை–I தனது வாதத்தில், எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

7. மாறாக எதிரி தரப்பில் தோன்றிய கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை உறுதிபடுத்தும் வகையில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் அமையவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

8. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டது.

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில், எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.**

9. எதிரி அ.சா.1 ஐ பொது இடத்தில் ஆபாசமாக திட்டியதாகவும், வாகனத்தின் சாவியால் அ.சா.1 ன் வாயின் அருகில் குத்தியதாகவும், அவரை கழுத்து, மார்பு மற்றும் தோள்பட்டையில் கடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியதாகவும், பொது இடத்தில் பெண்ணிற்கு வன்கொடுமை செய்ததாகவும் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது. மேற்கண்ட குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்தும் பொருட்டு, அரசு தரப்பில் புகார்தாரர் அ.சா.1 ஆகவும், சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளாக அ.சா.1 ன் மகன் மற்றும் மருமகன் ஆகியோர் அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகவும் விசாரணை செய்யப்பட்டுள்ளனர்.

10. அ.சா.1 கொடுத்துள்ள புகாரில், சம்பவ நாள் அன்று இரவு தன்னுடைய கோழியை காணவில்லை என்று அவரது தம்பி எதிரியின் வீட்டின் வழியாக சென்றபோது, மதுபோதையில் இருந்த எதிரி அ.சா.1 ஐ ஆபாசமான வார்த்தைகளால் திட்டி, வாகனத்தின் சாவியால் அவரது வாயின் மீது குத்தியதாகவும், கழுத்து, தோள்பட்டை மற்றும் மார்பு ஆகிய பகுதிகளில் கடித்து காயம் ஏற்படுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட சங்கதியை சார்ந்து அ.சா.1 தன்னுடைய முதல் விசாரணையிலும் சாட்சியம் அளித்துள்ளார்.

11. மேலும் அ.சா.1 ன் மகன் அ.சா.2 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் அ.சா.1ன் அலறல் சத்தம் கேட்டு சம்பவ இடம் சென்றதாகவும், அப்போது எதிரி அ.சா.1ன் கழுத்தை பிடித்துக் கொண்டிருந்ததாகவும், அதை அ.சா.2 விலக்கி விட்டதாகவும், எதிரி அ.சா.1ஐ சாவியால் காது, கை, நெற்றி ஆகிய இடங்களில் குத்தி வைத்திருந்ததாகவும், மேலும் அவரது வயிறு, நெஞ்சு ஆகிய பகுதிகளில் கடித்து வைத்திருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் அ.சா.1ன் மருமகன் அ.சா.2 தனது முதல் விசாரணை சாத்தியத்தில், எதிரி அ.சா.1ன் கழுத்து மற்றும் வயிற்று பகுதியில் கடித்து விட்டதாகவும், அவருடைய கழுத்தை பிடித்ததால் அவர் மயங்கி கீழே விழுந்து விட்டதாகவும் சாட்சியம் வைத்துள்ளார்.

12. அ.சா.1 கொடுத்துள்ள புகாரில், தன்னுடைய சத்தம் கேட்டு தனது மருமகள் மற்றும் பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆகியோர் அங்கு வந்து தன்னை காப்பாற்றியதாக உள்ள நிலையில், அரசு தரப்பில் அ.சா.1ன் மருமகள் மற்றும் பக்கத்து வீட்டுக்காரர் யாரும் சாட்சிகளாக விசாரணை செய்யப்படவில்லை. மாறாக, அ.சா.1ன் மகன் மற்றும் மருமகன் ஆகியோர் அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். ஆனால் மேற்கண்ட இருவரும்

சம்பவ நேரத்தில் போது அங்கு வந்ததாக அ.சா.1ன் புகாரில் எவ்வித சங்கதிகளும் காணப்படவில்லை.

13. இந்நிலையில், சம்பவமானது அ.சா.1 மற்றும் எதிரி வீட்டு வாசலில் நடந்ததாக அரசு தரப்பு வழக்கு அமைந்துள்ளது. அதன் அருகில் அ.சா.1ன் வீட்டை தவிர வேறு வீடுகள் ஏதும் காணப்படவில்லை. அதனை உறுதிப்படுத்தும் வகையில் அ.சா.1 தன்னுடைய சாட்சியத்தில் சம்பவ நாள் அன்று காணாமல் போன தன்னுடைய கோழியை தேடிக்கொண்டு எதிரியின் வீட்டின் வழியாக சென்றதாகவும், அந்த வழி பொது வழி பாதை தான் என்று குறிப்பிட்டுள்ளார். மேற்கண்ட பொது வழி பாதையானது அ.சா.1 மற்றும் எதிரி ஆகியோருக்கு சொந்தமான பொது வழி பாதையா? அல்லது அரசுக்கு சொந்தமான பொது வழி பாதையா? என்பது குறித்து அரசு தரப்பு வழக்கில் எவ்வித விளக்கமும் கொடுக்கப்படவில்லை.

14. ஆனால் அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் மூலமாக சம்பவ இடத்தின் அருகில் வழிப்பாதை ஏதும் உள்ளதாக காணப்படவில்லை. எனவே சம்பவம் நடந்த இடமானது பொது

இடமாக கருத முடியாது. வாதத்திற்காக மேற்கண்ட சம்பவ இடம் பொதுப் பாதை என்று வைத்துக் கொண்டாலும், அ.சா.1 தன்னுடைய புகார் மற்றும் சாட்சியத்தில் எதிரி தன்னை ஆபாச வார்த்தைகளால் திட்டியதாக சொல்லி இருந்தாலும், எத்தகைய ஆபாச வார்த்தைகளால் திட்டினார்? என்பது குறித்து அவருடைய சாட்சியத்தில் எவ்வித சங்கதிகளும் காணப்படவில்லை. மேலும் சம்பவம் நடந்தபோது வேறு நபர்கள் யாரும் இல்லாத நிலையில், எதிரி அவரை ஆபாசமாக திட்டியதால் அவருக்கு அருவருப்பு ஏதேனும் ஏற்பட்டதா என்பது குறித்தும், அ.சா.1 ன் சாட்சியத்தில் எவ்வித சங்கதிகளும் காணப்படவில்லை.

15. மேலும் அரசு தரப்பு வழக்கின் படி, அ.சா.1 ஐ எதிரி வாகன சாவியால் குத்தி காயப்படுத்தியதாகவும், அவரை கடித்து காயப்படுத்தியதாகவும், சொல்லப்படும் நிலையில் மேற்கண்ட சம்பவத்தை யாரும் பார்த்ததாகவும் அரசு தரப்பு வழக்கு அமையவில்லை. மாறாக அவருடைய அலறல் சத்தம் கேட்டு தான் அவரது மருமகளும் பக்கத்து வீட்டுக்காரர்களும் வந்ததாக அ.சா.1 தன்னுடைய புகாரில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அதற்கு முரணாக அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் சத்தம் கேட்டு தன்னுடைய மகன் அ.சா.2, மருமகன்

அ.சா.3 மற்றும் மருமகள் கலாவதி ஆகியோர் அங்கு வந்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

16. மேற்கண்ட சூழ்நிலையில், அ.சா. 1 முதல் அ.சா.3 ஆகியோர் தங்கள் முதல் விசாரணை சாத்தியத்தில் அரசு தரப்பு வழக்கில் ஆதரவாக சாட்சியம் அளித்து இருந்தாலும் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் தங்கள் குறுக்கு விசாரணை சாட்சியத்தில் எதிரி அ.சா.1ன் தம்பி என்பதால் அவருடன் சமாதானமாக சென்று விட்டதாகவும், அவரை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்வதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளனர். மேலே விவாதிக்கப்பட்ட படி, எதிரி அ.சா.1 ன் தம்பி என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதி ஆகும். எனவே அவர்களின் உறவு நிலையை கருத்தில் கொண்டும், அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோரின் சாட்சியங்களை பரிசீலனை செய்தும் இவ்வழக்கின் பிற சாட்சிகள் விலக்கப்பட்டு புலன்விசாரணை அதிகாரியின் அவரது கையெழுத்தை பரிச்சயம் பெற்ற காயார் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

17. அ.சா.4 அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம்

அளித்திருந்தாலும், அவருடைய சாட்சியம் ஆவணங்கள் அடிப்படையில் மட்டுமே அமைந்துள்ளது. மேலும் அ.சா.4–ன் சாட்சியத்தின் அடிப்படையில் மட்டுமே எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பால் உறுதிப்படுத்தப்பட்டதாக தீர்மானிக்க முடியாது. எனவே அ.சா.4 ன் சாட்சியமும் அரசு தரப்பு வழக்கிற்கு பயன்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

18. எனவே அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளான அ.சா.1 ஐ பொது இடத்தில் ஆபாசமாக திட்டியது, அ.சா.1 ற்கு சொற்பகாயம் ஏற்படுத்தியது மற்றும் பொது இடத்தில் பெண்ணிற்கு வன்கொடுமை செய்தது ஆகியவை அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**இறுதியாக, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி, எதிரி பிரிவுகள் 294(b), 323 மற்றும் 324 இ.த.ச. மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து, எதிரியை பிரிவு 271(1) பா.நா.சு.ச–வின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

வழக்கு சொத்துக்கள் இல்லை. எதிரி எழுதிக்கொடுத்த பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று (08.06.2026) இத்திறந்த நீதிமன்றத்தில் இவ்அவையறிய பகரப்படுகிறது.

NILAVARASAN KASI

Digitally signed by NILAVARASAN KASI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்போரூர்.**

**அரசுத்தரப்பு சாட்சிகள்;**

| | |
|---|---|
| அ.சா.1 | திருமதி. கலைசெல்வி (புகார்தாரர்/காயமுற்றசாட்சி) |
| அ.சா.2 | திரு. கார்த்திகேயன் (செவிவழி சாட்சி) |
| அ.சா.3 | திரு.பிரபு (செவிவழி சாட்சி) |
| அ.சா.4 | திரு.திவ்யகுமார் (காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்;—**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 16.03.2024 | புகார் |
| அ.சா.ஆ.2 | 19.03.2024 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 19.03.2024 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.4 | 19.03.2024 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 15.03.2024 | அ.சா.1 ற்கு வழங்கப்பட்ட கருத்துரையுடன் கூடிய விபத்து பதிவேடு |

**<u>அரசு தரப்பு சான்று பொருள்,–</u>** இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்;</u>** இல்லை.

**<u>குறிப்பு;–</u>**

| | |
|---|---|
| 1. | இவ்வழக்கின் எதிரி கடந்த 19.03.2024 அன்று கைது செய்யப்பட்டு, இந்நீதிமன்ற பிணையில் சென்றுள்ளார். . |
| 2. | இவ்வழக்கின் சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை. |
| 3. | தீர்ப்பு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| 4. | இத்தீர்ப்பின் நகல் மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர், செங்கல்பட்டு அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. |

NILAVARASAN KASI

Digitally signed by NILAVARASAN KASI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருப்போரூர்.**